நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**திருத்தணியில் தக்காளி விலை கிடுகிடு உயர்வு**

First Published : 09 Nov 2010 12:43:20 AM IST



திருத்தணி, நவ. 8: திருத்தணியில் கனமழை காரணமாக, தக்காளி விலை கிடுகிடு என உயர்ந்துள்ளது.

÷தமிழகம் முழுவதும் 3 நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. மழை காரணமாக தக்காளி விளைச்சல் பாதிப்படைந்து, திருத்தணிக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளது.

÷தொடர் கனமழையின் காரணமாக, திருத்தணி காமராஜர் மார்க்கெட், அரக்கோணம் சாலையில் உள்ள உழவர் சந்தை போன்ற இடங்களில் கடந்த வெள்ளிக்கிழமை தக்காளி கிலோ ரூ. 6-க்கு விற்பனை செய்யப்பட்டது.

÷இந்நிலையில் திருத்தணிக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளதால் ஞாயிற்றுகிழமை விலை உயர்ந்து கிலோ ரூ. 15 முதல் ரூ. 20 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

÷இது குறித்து காய்கறி வியாபாரி பழனி கூறியது: "திருத்தணியில் உள்ள காமராஜர் மார்க்கெட் மற்றும் கடைகளுக்கு சென்னை, பெங்களூர், வேலூர் ஆகிய பகுதிகளில் இருந்து அதிக அளவில் தக்காளிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

÷தினமும் 4 முதல் 6 லோடுகள் தக்காளி வரத்து உள்ளது. கடந்த மாதம் 20 கிலோ கொண்ட பெட்டி ரூ. 160-க்கும், முதல் ரகம் ரூ. 190-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

÷சில்லறை விலையில் தக்காளி கிலோ ரூ. 10 முதல் அதிகபட்சமாக ரூ. 12-க்கு விற்பனை செய்யப்பட்டது.

÷தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாக, தக்காளி விலை கிலோவுக்கு ரூ. 8 வரை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ரூ. 10-க்கு விற்ற இரண்டாம் ரக தக்காளி தற்போது ரூ. 20 வரை விற்பனை செய்யப்படுகிறது.

÷தக்காளி விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது' என்று அவர் கூறினார்.

**கோழிப் பண்ணை வரலாற்றிலேயே முதன்முறையாக முட்டை ரூ. 2.90**

First Published : 09 Nov 2010 09:32:15 AM IST

நாமக்கல், நவ. 8: கோழிப் பண்ணை வரலாற்றிலேயே முதன் முறையாக தமிழகம் மற்றும் கேரளத்தில் முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு ரூ. 2.90 ஆக உயர்ந்துள்ளது.

÷தமிழகத்தில் முட்டை உற்பத்தியின் கேந்திரமாக விளங்குவது நாமக்கல் மண்டலம். இங்கு, 800-க்கும் மேற்பட்ட கோழிப் பண்ணைகள் உள்ளன. தினமும் 2.87 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தியில் 10 சதம் முட்டைப் பவுடர் தயாரிப்புக்கும், வாரம் 3.25 கோடி முட்டைகள் தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்துக்கும் அனுப்பப்படுகின்றன. மீதமுள்ளவை தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

÷முட்டை விலையை நிர்ணயம் செய்ய நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) இயங்கி வருகிறது. பிற மாநிலச் சந்தைகளின் நிலவரம், முட்டையின் நுகர்வு, உள்ளூர் விற்பனை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு விலை நிர்ணயம் செய்யப்படுவது வழக்கம். புரட்டாசி மாதம் மட்டும் முட்டை ஒன்றின் விலை ரூ. 2.50-ஆக நீடித்திருந்தது.

÷புரட்டாசி முடிந்து வடகிழக்குப் பருவமழை, தீபாவளி ஆகிய காரணங்களால் விலை உயரத் துவங்கியது. கடந்த 2 வாரத்தில் 40 காசுகள் வரை விலை உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் திங்கள்கிழமை கூடிய என்இசிசி விலை நிர்ணயக் குழுவானது முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலையை ரூ. 2.90 ஆக உயர்த்தி அறிவித்தது (முந்தைய விலை ரூ. 2.85).

÷வடகிழக்குப் பருவமழையால் வட மாநிலங்களில் முட்டையின் நுகர்வு அதிகரித்து விலையும் உயர்ந்துள்ளது. இதேபோல், தமிழகம் மற்றும் கேரளத்திலும் முட்டையின் நுகர்வு அதிகரித்துள்ளதால் முட்டை விலை ரூ. 2.90 ஆக உயர்ந்துள்ளது. கோழிப் பண்ணை துவங்கிய கடந்த 35 ஆண்டுகளில் இதுவே அதிகபட்ச விலையாகும். கடந்தாண்டு நவம்பரில் முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை ரூ. 2.88-ஆக இருந்தது. இதன் பிறகு ரூ. 2.90 என்பதே அதிகபட்ச விலையாகும். இந்த விலை உயர்வானது கோழிப் பண்ணையாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. வரும் நாள்களிலும் விலை உயர்வு ஏற்படும் என்ற எதிர்பார்ப்புள்ளது.

**வேளாண் கருவிகளை பயன்படுத்தினால் லாபம் அதிகரிக்கும்: ஆட்சியர்**

First Published : 09 Nov 2010 09:31:36 AM IST

நாமக்கல், 8: வேளாண் கருவிகளை பயன்படுத்தினால், விவசாயத்தில் கிடைக்கும் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும் என நாமக்கல் ஆட்சியர் சோ.மதுமதி கூறினார்.

÷நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் திங்கள்கிழமை நடந்தது.

இக் கூட்டத்தையொட்டி, மானிய விலையில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, ஆட்சியர் பேசியது:

÷தற்போது விவசாயக் கூலியாள்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் விவசாயம் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு விவசாயக் கருவிகளை வாங்க மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்குகின்றன.

÷விவசாயிகள் வேளாண் கருவிகளைப் பயன்படுத்துவதால் முதலீடு பெருமளவு குறைகிறது.

அதே சமயம், விவசாயத்தின் மூலம் அவர்களுக்கு கிடைக்கும் லாபம் பன்மடங்கு அதிகரிக்கிறது.

÷தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள பலவகை பயிர் கதிரடிக்கும் இயந்திரம் விவசாயிகளிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இக் கருவியை உபயோகப்படுத்தி மக்காச்சோளம், நாட்டுச் சோளம், சூரியகாந்தி, நெல் உள்ளிட்ட பயிர் வகைகளைக் கதிரடிக்கலாம்.

÷குறைந்த வேலையாள்களை கொண்டு இந்த இயந்திரத்தை இயக்க முடியும். அதனால் விவசாயிகளுக்கு ஒரு மாதத்துக்கு ரூ. 15 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும். இதன் விலை ரூ. 3.10 லட்சம். இதில் ரூ. 1.5 லட்சம் வரை வேளாண் பொறியியல் துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது என்றார்.

÷தானியங்கி களை எடுக்கும் கருவி, பவர் டில்லர், பிரஸ் கட்டர், ரோட்டரி டில்லர், விசைத் தெளிப்பான் உள்பட மொத்தம் ரூ. 26.67 லட்சம் மதிப்பிலான 26 வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இக் கருவிகளை வாங்க விவசாயிகளுக்கு ரூ. 8.75 லட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

÷இந்த இயந்திரங்களைப் பயன்படுத்துவது குறித்து பயிற்சி அளிக்க வேளாண் பொறியியல் துறை திட்டமிட்டுள்ளது. ஒரு வாரம் நடைபெற உள்ள பயிற்சியில் எழுத, படிக்கத் தெரிந்த 18 முதல் 40 வயதுக்கு உள்பட்டோர் பங்கேற்கலாம்.

மேலும் விவரங்களுக்கு வேளாண் பொறியியல் துறையின் நாமக்கல் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**உரமாகும் கழிவுப்பஞ்சு**

First Published : 09 Nov 2010 09:09:13 AM IST

பல்லடம், நவ. 8: பல்லடம் பகுதியில் கழிவுப்பஞ்சை உரமாகப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

÷விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை; அப்படியே வந்தாலும் வேலை தெரிவதில்லை. இதனால் இயற்கை உரங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மாட்டுச்சாணத்திற்கு

மாற்றாக மில்களில் கழிவுப்பஞ்சை வாங்கிவந்து அதனை உரமாகப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

÷கழிவுப்பஞ்சு மண்ணின் நீர்ப்பிடிப்புத் தன்மையை அதிகரித்து, மண் இறுகாமல் வைத்திருக்கிறது. இதன் மூலம் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. இது குறித்து விவசாயி ஒருவர் கூறியது:

÷ரசாயன உரங்களை இடுவதால், மண்புழு எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது. இயற்கை உரமான பஞ்சுக் கழிவால் மண்புழுக்களுக்கு தீங்கு ஏற்படுவதில்லை. மண்புழு இனப்பெருக்கத்தால் பஞ்சுக் கழிவுகள் உரமாக மாற்றப்படுகின்றன. கழிவுப்பஞ்சை ஒரு தடவை விவசாய நிலத்தில் போட்டால் ஒராண்டுக்கு உரச்செலவு இல்லை. மண் வளமும் பாதுகாக்கப்படுகிறது. நல்ல மகசூலும் கிடைக்கிறது என்றார்.

**வேளாண் கருவிகளை பயன்படுத்தினால் லாபம் அதிகரிக்கும்: ஆட்சியர்**

First Published : 09 Nov 2010 09:31:36 AM IST

நாமக்கல், 8: வேளாண் கருவிகளை பயன்படுத்தினால், விவசாயத்தில் கிடைக்கும் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும் என நாமக்கல் ஆட்சியர் சோ.மதுமதி கூறினார்.

÷நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் திங்கள்கிழமை நடந்தது.

இக் கூட்டத்தையொட்டி, மானிய விலையில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, ஆட்சியர் பேசியது:

÷தற்போது விவசாயக் கூலியாள்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் விவசாயம் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு விவசாயக் கருவிகளை வாங்க மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்குகின்றன.

÷விவசாயிகள் வேளாண் கருவிகளைப் பயன்படுத்துவதால் முதலீடு பெருமளவு குறைகிறது.

அதே சமயம், விவசாயத்தின் மூலம் அவர்களுக்கு கிடைக்கும் லாபம் பன்மடங்கு அதிகரிக்கிறது.

÷தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள பலவகை பயிர் கதிரடிக்கும் இயந்திரம் விவசாயிகளிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இக் கருவியை உபயோகப்படுத்தி மக்காச்சோளம், நாட்டுச் சோளம், சூரியகாந்தி, நெல் உள்ளிட்ட பயிர் வகைகளைக் கதிரடிக்கலாம்.

÷குறைந்த வேலையாள்களை கொண்டு இந்த இயந்திரத்தை இயக்க முடியும். அதனால் விவசாயிகளுக்கு ஒரு மாதத்துக்கு ரூ. 15 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும். இதன் விலை ரூ. 3.10 லட்சம். இதில் ரூ. 1.5 லட்சம் வரை வேளாண் பொறியியல் துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது என்றார்.

÷தானியங்கி களை எடுக்கும் கருவி, பவர் டில்லர், பிரஸ் கட்டர், ரோட்டரி டில்லர், விசைத் தெளிப்பான் உள்பட மொத்தம் ரூ. 26.67 லட்சம் மதிப்பிலான 26 வேளாண் கருவிகள்

விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இக் கருவிகளை வாங்க விவசாயிகளுக்கு ரூ. 8.75 லட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

÷இந்த இயந்திரங்களைப் பயன்படுத்துவது குறித்து பயிற்சி அளிக்க வேளாண் பொறியியல் துறை திட்டமிட்டுள்ளது. ஒரு வாரம் நடைபெற உள்ள பயிற்சியில் எழுத, படிக்கத் தெரிந்த 18 முதல் 40 வயதுக்கு உள்பட்டோர் பங்கேற்கலாம்.

மேலும் விவரங்களுக்கு வேளாண் பொறியியல் துறையின் நாமக்கல் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**மல்சிங்சீட் முறையில் திராட்சை விவசாயம்**

First Published : 08 Nov 2010 11:51:34 AM IST

கம்பம், நவ. 7:தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் மல்சிங்சீட் முறையில் திராட்சை பயிரிடப்பட்டுள்ள மாதிரித் தோட்டத்தை மாவட்ட ஆட்சியர் பூ.முத்துவீரன் பார்வையிட்டார்.

கம்பம் அருகே உள்ள காமயகவுண்டன்பட்டியில் ஜெயக்குமாரி என்பவர், தனது திராட்சைத் தோட்டத்தில் மல்சிங்சீட் என்ற புதிய முறையில் விவசாயம் செய்து வருகிறார். இதை மாதிரித் திட்டமாகத் தோட்டக் கலைத் துறையினர் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இந்தப் புதிய முறையில், திராட்சைக் கொடியின் இரண்டு பக்கமும் ஒன்றரை மீட்டர் முதல் 5 மீட்டர் அகலம் வரை மல்சிங் சீட்டால் மண்ணை மூடி வைக்கின்றனர்.

இதனால் மண்ணில் உள்ள ஈரப்பதத்தை அதிக நேரம் தக்க வைக்க முடியும். களையின் வளர்ச்சியை தடுக்க முடியும். இடுபொருள்களின் தேவையும் குறைகிறது.

மாவட்ட ஆட்சியர் பூ.முத்துவீரன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வெ.பாலகிருஷ்ணன், தோட்டக் கலைத் துறைத் துணை இயக்குநர் முருகன், உதவி இயக்குநர் செந்தில்குமார் ஆகியோர் மல்சிங் சீட் முறையில் மேற்கொள்ளப்படும் திராட்சை விவசாயத்தைப் பார்வையிட்டனர்.

ஆட்சியர் கூறியதாவது:தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்தைச் சுற்றி உள்ள பகுதிகளில் திராட்சை விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மல்சிங்சீட் முறையில் ஏக்கருக்கு 5 டன்னிலிருந்து 8 டன் வரை திராட்சை விளைவிக்க முடிகிறது.

இந்த முறையைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்குத் தோட்டக் கலைத் துறை மூலம் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது என்றார்.

**அதிக மகசூல் பெற மண் பரிசோதனை அவசியம்**

First Published : 08 Nov 2010 11:03:45 AM IST

Last Updated : 08 Nov 2010 12:42:49 PM IST

ஈரோடு, நவ. 7: அதிக மகசூல் பெறுவதற்கு மண் பரிசோதனை அவசியம் என்று வேளாண் அலுவலர் முருகேசன் தெரிவித்தார்.

வேளாண்துறை சார்பில் பவானியில் கிராம ஏற்புத் திட்டத் துவக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது. பவானி வட்டம், பெரிச்சிபாளையம் கிராமம், மண் பரிசோதனை விழிப்புணர்வுக்கான கிராம ஏற்புத் திட்ட கிராமமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மண் பரிசோதனை வேளாண் அலுவலர் முருகேசன் பேசியது:

பயிர் விளைச்சலில் அதிக மகசூல் பெற மண் பரிசோதனை மிகவும் அவசியம். மண் பரிசோதனை அடிப்படையில் பயிர்களுக்குத் தேவையான உரங்களை சிக்கனமாகவும், சமச்சீராகவும் பயன்படுத்த வேண்டும்.

மண் பரிசோதனையுடன், நீர் பரிசோதனையும் செய்வதும் அவசியம். கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ், இப்பகுதியில் மண் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் அடிப்படையில் உரமிடுதல் மிகவும் நல்லது என்றார்.

விவசாயிகளுக்கு மண் வள அட்டையை, மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் சசிகலா வழங்கினார். பெரிச்சிபாளையம், வரதநல்லூர், மேட்டுப்பாளையம் பகுதி விவசாயிகள் பங்கேற்றனர்.

**பேய்குளத்தில் நெல் சாகுபடி பயிற்சி முகாம்**

First Published : 08 Nov 2010 12:35:49 PM IST

சாத்தான்குளம், நவ. 7: பேய்குளத்தில் விவசாயிகளுக்கான ராஜராஜன் 1000 நெல் சாகுபடி பயிற்சி முகாம் நடைபெற்றது.

பேய்குளம் விவசாயிகள் சங்கத் தலைவர் சங்கரலிங்கம் தலைமை வகித்தார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் வரவேற்றார்.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் உலக வங்கி ஆகியவை இணைந்து கருமேனி ஆற்று பாசனப் பகுதியில் செயல்படுத்தப்படும் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ், கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி பேராசிரியர்கள் விவசாயிகளுக்கு நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விளக்கமளித்தனர்.

நாற்றங்கால், நடவு வயல், களை மேலாண்மை குறித்து மண் மற்றும் பயிர்கள் துறைத் தலைவர் பேராசிரியர் சுந்தர்சிங் ராஜபாண்டியன் பேசினார்.

உர நிர்வாகம் மற்றும் ஊட்டச்சத்து பற்றாக்குறை குறித்து உதவி பேராசிரியர் சீனிவாசன், பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு முறைகள் குறித்து பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் ஆல்வின் ஆகியோர் பேசினர்.

இளநிலை ஆராய்ச்சியாளர் ராஜலட்சுமி நன்றி கூறினார்.

**கரூர் மாவட்ட உழவர் சந்தைகளில் 1366 டன் காய்கறி, பழங்கள் விற்பனை**

First Published : 08 Nov 2010 02:13:46 PM IST

கரூர், நவ.7: கரூர் மாவட்டத்திலுள்ள உழவர் சந்தையில் கடந்த அக்டோபர் மாதத்தில் 1,366 டன் காய்கறி, பழங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து கரூர் வேளாண் துணை இயக்குநர் (வணிகம்) ரவி வெளியிட்டுள்ள அறிக்கை:

கரூர் மாவட்டத்தில் கரூர், பள்ளப்பட்டி, வேலாயுதம்பாளையம், குளித்தலை ஆகிய பகுதிகளில் உழவர் சந்தைகள் செயல்படுகின்றன. இவற்றில் விற்கப்படும் காய்கறிகள் விவசாயிகளின் நிலங்களிலிருந்து நேரடியாகப் பெறுவதால் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. இதனால், அதிகளவில் விற்பனையாகும் காய்கறி மற்றும் பழங்களால் பொதுமக்களும், விவசாயிகளும் மிகுந்த பயனடைந்து வருகின்றனர்.

கரூர் மாவட்டத்தில் கடந்த அக்டோபர் மாதத்தில் உழவர் சந்தைகள் மூலமாக 1,366 டன் காய்கறி, பழங்கள் விற்பனையாகியுள்ளன.

கரூர் உழவர் சந்தையில் ரூ. 98.43 லட்சத்தில் 729டன் காய்கறிகள், பழங்களும், பள்ளப்பட்டியில் ரூ. 31.16 லட்சத்தில் 194 டன்னும், குளித்தலையில் ரூ. 28.48 லட்சத்தில் 254 டன்னும், வேலாயுதம்பாளையத்தில் ரூ. 27 லட்சத்தில் 189 டன்னும் காய்கறிகள் விற்பனையாகியுள்ளன.

சந்தையில் காய்கறிகள் அல்லாமல் பால், தயிர், மோர், வெண்ணைய், நெய் மற்றும் அரிசி மாவு, ராகிமாவு, கம்புமாவு, சோளமாவு போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களையும் விவசாயிகள் கொண்டு வந்து விற்கலாம். இதற்கான அனுமதியை சந்தை வேளாண் அலுவலரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றார் அவர்.

தினமலர்

**மேட்டூர் சுற்றுபகுதியில் தொடர் மழை: கிணற்று பாசன விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2010,01:21 IST

மேட்டூர்: மேட்டூர் சுற்றுப்பகுதியில் தொடர்ச்சியாக பெய்யும் மழையால் நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் கிணற்று பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேட்டூர் மற்றும் கொளத்தூர் சுற்றுப்பகுதியில் விவசாயிகள் நெல், வாழை, மஞ்சள், மிளகாய் பயிர்களை அதிகஅளவில் சாகுபடி செய்துள்ளனர். கடந்த சில மாதங்களாக அவ்வப்போது சாகுபடிக்கு தேவையான அளவில் மழை பெய்வது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மேட்டூர் சுற்றுப்பகுதியில் கடந்த ஜூன் மாதம் 86.8 மி.மீ., ஜூலையில் 93, ஆகஸ்ட்டில் 102, செப்டம்பரில் 125, அக்டோபரில் 318 மி.மீ., மழை பெய்துள்ளது. நவம்பர்1ம் தேதி 22.6 மி.மீ., 2ம் தேதி 37.8, 4ம் தேதி 36.4, 5ம் தேதி 57.8, 6ம் தேதி 42.8, 7ம் தேதி 27.4, மழை பதிவாகியுள்ளது. தொடர்மழையால் மேட்டூர் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்து, பாசன கிணறுகளின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.

**நாட்டு கோழி வளர்ப்புக்கு கிராமங்களில் இயற்கை பண்ணை: ஆர்வம் காட்டும் இளைஞர்கள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2010,01:10 IST

மேட்டூர்: ப்ராய்லர் கோழிகளை விட நாட்டு கோழிகளை அசைவ ப்ரியர்கள் விரும்பி வாங்குவதால், சமீபகாலமாக கிராமபுறங்களில் இயற்கையான சூழலில் பரந்து விரிந்த பண்ணை அமைத்து நாட்டு கோழி வளர்ப்பது அதிகரித்து வருகிறது. ப்ராய்லர் கோழிபண்ணைகளை பொறுத்தவரை, நெரிசலான இடத்தில் கூட்டம், கூட்டமாக கோழிகள் வளர்க்கப்படுகிறது. விரைவாக வளர வேண்டும் என்பதற்காக அந்த கோழிகளுக்கு பிரத்யோகமாக தீவனங்களும் தருகின்றனர். வளர்ந்த 40 முதல் 50 நாட்களுக்குள் கோழிகளை விற்பனைக்கு அனுப்புகின்றனர். கறி மென்மையாக இருப்பதாலும், விலை குறைவாக இருப்பதாலும் அசைவ ப்ரியர்கள் ப்ராய்லர்கள் கோழி கறியை விரும்பி சாப்பிடுகின்றனர். சமீபகாலமாக ப்ராய்லர் கோழிகளை விட நாட்டுகோழியை விரும்பும் அசைவ ப்ரியர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆனால், நாட்டு கோழி உற்பத்தி குறைவாக இருப்பதால் விலை அதிகமாக உள்ளது. ப்ராய்லர் கோழிக்கு இணையாக நாட்டு கோழி உற்பத்தி பெருகினால், விலையும் குறையும், கூடுதலாக

விற்பனையாகும் என்பதால் சமீபகாலமாக இளைஞர்கள் கிராம புறங்களில் இயற்கையான சூழ்நிலையில் பண்ணை அமைத்து நாட்டுகோழி வளர்க்க துவங்கியுள்ளனர்.

மேட்டூர் தாலுகா, நங்கவள்ளி அடுத்த பூசாரிதாசன் வளவு பகுதியில் நாட்டு இயற்கை சூழலில் பண்ணை அமைத்து, 3,000 நாட்டு கோழிகள் வளர்க்கப்படுகிறது. ப்ராய்லர் கோழி பண்ணை அமைப்பவர்களுக்கு மத்தியில் நாட்டு கோழி பண்ணை அமைத்துள்ள மயில்சாமி, வேலு கூறியதாவது: நாங்கள் நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் சுற்றிலும் வேலி அமைத்து, மரங்களுக்கு மத்தியில் நாட்டு கோழி வளர்க்கிறோம். இரவில் கோழிகளை அடைக்க பண்ணையும் தனியாக அமைத்துள்ளோம். பண்ணையில் இருந்து காலையில் வெளியேறும் கோழிகள் 4 ஏக்கர் பரப்பில் சுதந்திரமாக சுற்றி வந்து இரைதேடும். அதற்கு கோழி தீவனம், பச்சை கீரை, காய்கள் வழங்குகிறோம். குஞ்சுகளை மொடக்குறிச்சி பகுதியில் இருந்து மொத்தமாக வாங்கி வந்து 90 நாள் வரை வளர்த்து வியாபாரிகளுக்கு விற்கிறோம்.

நாட்டு கோழி தேடி பாம்புகள் வருவது வாடிக்கை. அதனால், வேலியின் மேற்பகுதியில் வலை அடித்துள்ளோம். அப்படி இருந்தும் இரவில் சில சமயம் பாம்பு நுழைந்து விடுகிறது. ஒரு கோழிக்கு நோய் பரவினாலும் உடனடியாக கண்டு பிடித்து மருந்து கொடுத்து விடுவோம். வியாபாரிகள் கோழி ஒரு கிலோ 130 ரூபாய்க்கு வாங்கி செல்கின்றனர். இயற்கையான சூழலில், இயற்கை உணவை சாப்பிட்டு வளர்வதால் எங்கள் பண்ணையில் இருந்து வியாபாரிகளும், பொதுமக்களும் கோழிகளை விரும்பி வாங்குகின்றனர். நாட்டுகோழி கறியை வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிட்டு, அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**காரிமங்கலம் பகுதியில் ஏரிகள் நிரம்பின விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2010,00:09 IST

காரிமங்கலம்: காரிமங்கலம் சுற்றுவட்டார பகுதியில் பெய்த தொடர்மழையால் ஏரிகள் நிரம்பி வருவதை அடுத்து விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். காரிமங்கலம் சுற்றுவட்டார பகுதியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. விவசாயத்தையே பிரதான தொழிலாக கொண்டுள்ள நிலையில் கடந்த பல மாதமாக தண்ணீர் இல்லாமல் விவசாய தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. கடந்த இரு மாதங்களாக அடிக்கடி மழை பெய்து வருகிறது. இதனால், பூமி குளிர்ச்சியடைந்த நிலையில் கடந்த சில நாட்களாக காரிமங்கலம் சுற்றுவட்டார பகுதியில் பரவலான மழை பெய்து வருதை அடுத்த நீர்நிலைகளில் தண்ணீர் வரத்து அதிகளவில் உள்ளது. காரிமங்கலம் பெரிய ஏரி, மொட்டலூர் ஏரி, குட்டூர் ஏரி, அடிலம் ஏரி, பொம்மஅள்ளி உட்பட பல்வேறு ஏரிகளில் தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி அணை வலதுபுற கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டதை அடுத்து கும்பாரஅள்ளி ஏரியில் தண்ணீர் நிரம்பி வருகிறது.

இதையடுத்து திண்டல் ஏரி மற்றும் பல ஏரிகளுக்கு கிருஷ்ணகிரி அணை நீர் விரைவில் வந்து சேரும் எனவும் இதனால் இந்த ஆண்டு விவசாய பணிக்கு தேவையான தண்ணீர் நீர் ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**பயிறு வகைகளை தாக்கும்,கொம்பு புழுக்களை கட்டுப்படுத்த வேண்டும்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2010,00:41 IST

கோவில்பட்டி:கோவில்பட்டி பகுதியில் பயிறு வகைகளை தாக்கும் கொம்புப்புழுக்களை விவசாயிகள் கட்டாயம் கட்டுப்படுத்த வேண்டுமென வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து கோவில்பட்டி வேளாண் உதவி இயக்குநர் மாரிமுத்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,கோவில்பட்டி வட்டாரத்தில் பயிரிடப்படும் மானாவாரி பயிர்களில் அதிகமான பரப்பளவில் உளுந்து, பாசி உள்ளிட்ட பயிறு வகைப்பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பயிர்களில் தற்போது கொம்புப்புழு எனப்படும் ஒருவகை புழுக்கள் பயிர்களை தாக்கி அதிகமான அளவில் சேதப்படுத்துவதாக விவசாயிகளிடமிருந்து தகவல் வந்தது.

இதையடுத்து வேளாண் உதவி இயக்குநர் தலைமையில் வேளாண் அதிகாரிகள் கோவில்பட்டி வட்டாரத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு அதுகுறித்த பிரச்னைகளை சமாளிப்பது குறித்த வழிமுறைகளை அறிவித்துள்ளோம். தற்போது பயிறு வகைகளை சேதப்படுத்தும் புழுக்கள் ஸ்பிரின்சிட் எனப்படும் அந்துப்பூச்சி வகையை சேர்ந்ததாகும். விவசாயிகளால் கொம்புப்புழுக்கள் என அழைக்கப்படுகிறது. இது இலைகளின் மீது ஒவ்வொரு முட்டையாக இட்டு, முட்டையிலிருந்து வெளிவந்த புழுக்கள் 2 மாதகாலம் புழுக்களாகவே வாழும். தொடர்ந்து 45 நாட்கள் தன்னை கூட்டுப்புழுவாக பூமிக்குள் புதைத்துக் கொள்ளும் பழக்கம் கொண்டது. அந்துப்பூச்சி நீலநிற தோள் பகுதியுடன், கருஞ்சாம்பல் நிறத்தில் இருக்கும்.

வளர்ச்சியடைந்த புழுக்கள் நன்கு சாப்பிட்ட நிலையில் மிகவும் குண்டாக இருக்கும் என்பதுடன், இப்புழுக்கள் பச்சை, மஞ்சள், பழுப்பு ஆகிய மூன்று நிறங்களில் எட்டு மஞ்சள் வரிகளுடன் காணப்படும். இதன் தாக்குதலில் உள்ள நிலங்கள் ஆடு மாடு மேய்ந்தது போல் அறிகுறி காணப்படும் என்பதால் இதை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தாவிடில் அதிகப்படியாக மகசூல் இழப்பை சந்திக்க நேரிடும். ஆகவே கீழ்காணும் வழிமுறைகளில் கொம்புப்புழுக்களை கட்டுப்படுத்த வேண்டும். எப்படியெனில் கையினால் புழுக்களை பொறுக்கியெடுத்து அழிக்கலாம். மேலும் ஏக்கருக்கு என்டோசல்பான் 400மிலி அல்லது குயினால்பாஸ் 500மிலி அல்லது மாலத்தியான் பவுடர் 5டி-10கிலோ என்ற அளவில் உபயோகித்து கொம்புப்புழுக்களை கட்டுப்படுத்தலாம் என விவசாயிகளுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. இது சம்பந்தமான

களஆய்வின் போது வேளாண்மை அலுவலர் பாலமுருகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செந்தில்குமார் உட்பட பலர் இருந்தனர்.

**ராஜராஜன் 1000 நெல் நாற்றங்கால் செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2010,00:42 IST

களக்காடு : களக்காட்டில் ராஜராஜன் 1000 நெல் நாற்றங்கால் செயல்விளக்கம் செய்துகாட்டப்பட்டது.களக்காடு வட்டாரத்தில் உள்ள கட்டளை பகுதியிலுள்ள விவசாயி வயலில் ஒரு ஏக்கரில் 14 நாள் வயதுடைய ராஜராஜன் 1000 நெல் நாற்றினை நடவு செய்வதற்கு தேவையான வாளிப்பான நெற் நாற்றினை பெறுவதற்காக பாய் நாற்றங்கால் செயல் விளக்கம் வேளாண்மை துறையினரால் மேற்கொள்ளப்பட்டது. இம்முறையில் நெல் நாற்று விடுவதற்கு மூன்று கிலோ அம்பை.16 தமிழ்நாடு விதைச்சான்று துறையினரால் சான்றளிக்கப்பட்ட ஆதார விதை தண்ணீரில் ஊற வைத்து முளைகட்டி பயன்படுத்தப்பட்டது.

இம்முறையில் நெல் நாற்று விடுவதற்கு தேவையான எட்டு நாற்று மேடைகள் அதாவது ஒவ்வொன்றும் ஐந்து சதுர மீட்டர் அளவிலான எட்டு மேடைகள் ஒரு சென்ட் பரப்பில் அமைக்கப்பட்டது. இந்நாற்று மேடையின் மேல் பாலித்தீன் தாள் விரிக்கப்பட்டது. இத்தாளின் மேல் நாற்று மேடை அருகே உள்ள மண் எடுத்து இட்டு நெல் நாற்று விடுவதற்கான மேடை தயாரிக்கப்பட்டது. இம்மேடையின் மீது முளைகட்டிய நெல்விதை விதைக்கப்பட்டது.நெல்நாற்று மேடை தயாரிக்க அதற்கான விதைப்பு (இரும்பு) சட்டம் பயன்படுத்தப்பட்டதால் நாற்றுமேடைதான் மேற்கொண்ட பட்டறியும் பயணத்தின் போது வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் கண்ட பாய் நாற்றங்கால் போல் இருந்ததாக அருகேயிருந்த விவசாயிகள் குறிப்பிட்டார்கள்.

இதுகுறித்து களக்காடு வேளாண்மை உதவி இயக்குநர் வேல்குமார் கூறுகையில், ""இவ்வாறு பாய் நாற்றங்கால் முறையில் நாற்று விடுவதால் விவசாயிகள் வாளிப்பான, வீரியமான, வேல் அறுந்திடாத நெல்நாற்றினை பெற இயலும். இம்முறையில் நாற்று விடுவதால் வேரின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். அதாவது பசுமையாக இருக்கும். நெல்நாற்றின் மேல் பாகத்தினை விட இருமடங்கு நீளத்தில் வெண்மை நிற வேர்ப்பகுதி காணப்படும். நெல் நாற்று விடுவதற்கான விதைக்கும் இரும்பு சட்டம் பயன்படுத்தி நாற்று விடுவதால் கிடைக்கும் நெல்நாற்று ராஜராஜன் 1000 நெல் நடவுக்கும் இயந்திர நடவுக்கும் ஏதுவானதாக இருக்கும்" என்றார்.இவ்வாறு நெல் நாற்று விடுவதற்கு முன் ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் சூடோமோனஸ் ப்ளோரசன்ஸ் என்ற அளவில் எதிர் உயிர் கொல்லி மற்றும் ஒரு பொட்டலம் அதாவது இருநூறு கிராம்

அசோஸ்பைரில்லம் உயிர் உரம் பயன்படுத்தி விதைநேர்த்தி செய்யப்பட்டதாகவும் செயல்விளக்க திடல் அமைக்கவிருக்கும் விவசாயி தெரிவித்தார்.

**கரும்பு டன்னுக்கு ரூ.3,000 கலெக்டரிடம் விவசாயிகள் மனு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2010,01:28 IST

ஈரோடு: கரும்பு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் கொள்முதல் விலை கோரி, கரும்பு உற்பத்தியாளர் சங்கத்தினர் கலெக்டரிடம் மனு கொடுத்தனர். தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர் சங்க மாநில துணைத் தலைவர் துளசிமணி, மாவட்டத் தலைவர் காசியண்ணன், செயலாளர் சாமியப்பன் மற்றும் விவசாயிகள் நேற்று காலை கலெக்டரை சந்தித்தனர். கரும்பு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் கொள்முதல் விலை தர வேண்டும் என வலியுறுத்தி, மனு கொடுத்தனர்.

அவர்கள் கூறியதாவது: மத்திய அரசு பார்கவா தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரை, "5-ஏ' படி ஆலைகளின் லாபத்தில் விவசாயிகளுக்கு பங்கு வழங்க வேண்டும். ஆனால், "5-ஏ' பிரிவு சமீபத்தில் பார்லிமென்ட்டில் நீக்கப்பட்டது; விவசாயிகளுக்கு விரோதமான செயல். 2010-11 பருவ காலத்துக்கு 8.5 சதவீதம் சர்க்கரை சத்துள்ள கரும்பு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்க வேண்டும் என, போராடி வருகிறோம். தமிழக அரசு, நடந்து முடிந்த சட்டசபை கூட்டத்தொடரில் கரும்பு டன் ஒன்றுக்கு வண்டி வாடகையுடன் 2,000 ரூபாய் வழங்கப்படும் என அறிவித்திருப்பது; கரும்பு விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

விலைவாசி உயர்வு, உரம், பூச்சி மருந்து மற்றும் பெட்ரோல், டீசல் விலை உயர்வு, வெட்டுக்கூலி உயர்ந்துள்ள நிலையில், அரசு அறிவித்த விலை கட்டுப்படியானதாக இல்லை. தமிழகத்தில் கரும்பு பயிரிடும் விவசாயிகள் நான்கு லட்சம் பேர் உள்ளனர். ஆண்டுதோறும் முத்தரப்பு கூட்டத்தை கூட்டி விவசாயிகளின் கருத்து அறிவது வழக்கம். இந்தாண்டு முத்தரப்பு கூட்டம் இதுவரை நடத்தப்படவில்லை. முத்தரப்பு கூட்டம் நடத்தாமல் கரும்பு விலையை அரசு அறிவித்திருப்பது பொருத்தமானதல்ல. கரும்புக்கான விலை நிர்ணயம் 8.5 சதவீதம் சர்க்கரை கட்டுமானத்துக்கு என்று இருந்த நிலையை படிப்படியாக மாற்றி, 9, 9.5 சதவீதம் என உயர்த்தி விலை நிர்ணயிப்பதை மத்திய அரசு பின்பற்றுகிறது. இது விவசாயிகளை வஞ்சிக்கும் செயல். எனவே, 8.5 சதவீதத்துக்கு தொடர்ந்து விலை நிர்ணயிக்க வேண்டும். சங்கம் சார்பில், இன்று (நேற்று) தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட கலெக்டரையும் சந்தித்து கரும்புக்கு டன்னுக்கு 3000 ரூபாய் கேட்டு மனு கொடுத்துள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வானிலை மாற்றத்தால் சிறுவாணி அணை நிரம்புமா? : குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2010,01:48 IST

கோவை : தற்போது நிலவும் வானிலை சூழலுக்கு சிறுவாணி அணை நிரம்புவதற்கு வாய்ப்புகள் இல்லை. வேறு ஏதாவது புயல் மீண்டும் அடித்தால் வானிலையில் மாற்றம் ஏற்பட்டு மழைபொழிந்தால் அணை நிரம்பும், என்று குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி கூறினார். கோவை மாநகரின் முக்கிய குடிநீர் ஆதாரமாக சிறுவாணி, பில்லூர் அணை ஆகியவை உள்ளன. கோவை மாநகராட்சியின் ஒரு பகுதி முழுமைக்கும் பில்லூர் அணையில் இருந்து வரும் குடிநீரும், மற்ற மூன்று பகுதி முழுமைக்கும் சிறுவாணி அணையில் இருந்து வரும் குடிநீரே பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் சிறுவாணி அணை அமைந்துள்ளது. கேரள மாநில எல்லையில் அமைந்திருந்தாலும் தமிழகத்திற்கே சிறுவாணி அணையிலிருந்து வரும் குடிநீர் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு நாளைக்கு அணையிலிருந்து 100 மில்லியன் லிட்டர் சிறுவாணி நீர் எடுக்கப்படுகிறது. மாநகராட்சி பகுதிக்கு 75 ஆயிரம் மில்லியன் லிட்டர் தண்ணீரும், வழியோர கிராமங்களுக்கு 25 ஆயிரம் மில்லியன் லிட்டர் தண்ணீரும் அன்றாடம் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவ மழையை நம்பியே இந்த அணை உள்ளது. ஆண்டொன்றிற்கு இரு பருவ காலத்திலும் அணை நிறைந்துவிடும். அணையில் இருக்கும் தண்ணீரை கொண்டே ஆண்டுமுழுக்க தண்ணீர் சப்ளை செய்யப்படும்.
இந்த ஆண்டு தென்மேற்குப்பருவ மழை எதிர்பார்த்த பலனை கொடுக்காவிட்டாலும் சிறுவாணி அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து அணை நிரம்பி வழிந்தது. தற்போது துவங்கிய வடகிழக்கு பருவமழை காலத்திற்கும் எப்படியும் சிறுவாணி அணை நிரம்பிவிடும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் அணை நிரம்பவில்லை. ஆண்டுதோறும் வழக்கமாக பெய்யும் பருவமழையில் தற்போது மாறுபாடு ஏற்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை பெய்யும் காலம் சற்று தள்ளிப்போனது. வடகிழக்கு பருவமழை பெய்யவேண்டிய காலம் முன் கூட்டியே வந்து விட்டது. இதனால் அணையில் வழக்கமாக இருக்கும் தண்ணீரின் கொள்ளளவில் தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டது.

வழக்கமாக தென்மேற்குப் பருவமழையாக இருந்தாலும், வடகிழக்குப் பருவமழையாக இருந்தாலும் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து அணை நிரம்பும் மதகுகள் வழியாக உபரி நீர் வெளியேறும். ஆனால் இந்த பருவத்தில் எப்படியும் அணை நிறையும் என்று நினைத்த

பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பெருத்த ஏமாற்றமே மிஞ்சியது. கடந்த இரண்டு நாட்களாக அணையின் நீர்ப் பிடிப்பு பகுதியில் மழை பெய்யவில்லை. அணைக்கு பாம்பாறு, பட்டியாறு, முத்தியாறு, சின்னாறுகளில் இருந்து வரும் தண்ணீர் வரத்து குறைந்தது.அணையின் நீர்மட்டம் கடல் மட்டத்திலிருந்து 878.50 மீட்டர். நேற்று மாலை 4.00 மணி நேர நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 874.50 மீட்டராக இருந்தது. இனியும் நிரம்புவதற்கு 4 மீட்டர் தூரம் உள்ளது. ஆனால் அணையை அடுத்து அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பம்ப்புகள் நான்கும் தண்ணீரில் மூழ்கியே காணப்படுகின்றன.

இது குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப்பொறியாளர் கோபாலகிருஷ்ணனிடம் கேட்டபோது, எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை. புயல் இனியும் இரண்டு நாட்களுக்கு நீடிக்கும், எப்படியும் மழை பெய்யும் என்று நினைத்தோம். அது நடக்கவில்லை."ஜல்' புயலுக்கு மாற்றாக வேறு ஏதாவது புயல் வந்தால், வானிலையில் வேகமான மாற்றம் ஏற்படும். மழை தொடர்ந்து பெய்யும். சிறுவாணி அணை நிரம்புவதற்கு வாய்ப்புகள் அதிகம். அதை தவிர அணை நிரம்புவதற்கு வாய்ப்புகள் இல்லை. தற்போதுள்ள தண்ணீரை வைத்தே வரும் கோடையை சமாளிக்க வேண்டும், என்றார்.

**உழவர் சந்தைக்கு காய்கறி வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2010,01:11 IST

சேலம்: சேலத்தில் நேற்று முன்தினம் பெய்த தொடர் மழையால் விவசாயிகள் காய்கறிகளை அறுவடை செய்ய இயலவில்லை. இதன் காரணமாக நேற்று சேலம் மாவட்ட உழவர் சந்தைகளுக்கு குறைந்த அளவில் விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், மேட்டூர், ஆட்டையாம்பட்டி, இளம்பிள்ளை ஆகிய இடங்களிலும் மாநகர பகுதியில் சூரமங்கலம், அஸ்தம்பட்டி, தாதகாப்பட்டி, அம்மாபேட்டை ஆகிய இடங்களிலும் உழவர்சந்தைகள் செயல்படுகின்றன. சேலம் மாவட்ட உழவர்சந்தைகளுக்கு சராசரியாக 1,000 விவசாயிகள் 150 டன்னுக்கும் மேலாக காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருவது வழக்கம். ஆனால், சேலத்தில் நேற்று முன்தினம் பெய்த தொடர் மழை காரணமாக விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. அத்துடன் விவசாயி கூலி தொழிலாளர்களில் பெரும் பாலானோர் மழை காரணம் காட்டி காய்கறிகளின் அறுவடைக்கு வரவில்லை.

இதன் காரணமாக உழவர் சந்தைகளுக்கு விற்பனைக்கு வரும் காய்கறிகளின் வரத்து 100 டன்னாக குறைந்தது. இதில் சேலம் மாநகரில் சூரமங்கலம் உழவர்சந்தைக்கு சாராசரியாக 239 விவசாயிகள் மூலம் 40 ஆயிரத்து 600 கிலோ காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படும். ஆனால், மழை காரணமாக நேற்று 180 விவசாயிகள் மட்டும் 30 ஆயிரத்து 400 கிலோ

காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அஸ்தம்பட்டி உழவர் சந்தைக்கு 75 விவசாயிகள் மூலம் 12 ஆயிரத்து 897 கிலோ காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படும். நேற்று 53 விவசாயிகள் மட்டும் எட்டாயிரத்து 150 கிலோ காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். தாதகாப்பட்டி உழவர் சந்தைக்கு 221 விவசாயிகள் மூலம் 31 ஆயிரத்து 562 கிலோ காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்ப்படும். நேற்று 68 விவசாயிகள் 14 ஆயிரத்து 150 கிலோ காய்கறிகளை மட்டுமே விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

அம்மாபேட்டை உழவர் சந்தைக்கு 102 விவசாயிகள் மூலம் 20 ஆயிரத்து 211 கிலோ காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படும். நேற்று 65 விவசாயிகள் மட்டும் 7 ஆயிரத்து 100 கிலோ காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். சேலம் மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள எட்டு உழவர் சந்தைகளுக்கும் சேர்த்து நேற்று 37 சதவீத விவசாயிகள் விற்பனைக்கு காய்கறிகளை கொண்டு வராததால் காய்கறிகளின் அளவு 140 டன்னாக குறைந்தது. அத்துடன் குறைந்த அளவில் விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வந்த நிலையில் எதிர்பார்த்த விற்பனை இல்லை. இதன் காரணமாக சேலம் மாநகரில் உள்ள அனைத்து உழவர் சந்தைகளும் கூட்டம் இன்றி  காணப்பட்டது. காய்கறிகளின் வரத்து குறைந்த நிலையில் விலையில் எந்த உயர்வும் ஏற்பட வில்லை.

**அரசு உணவு தானிய சேமிப்பு கிடங்கில் உப்பு மூட்டைகள் மழையில் நனைந்து சேதம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,21:33 IST

பண்ருட்டி :  பண்ருட்டியில் அரசு உணவு தானிய சேமிப்பு கிடங்கு முன் உப்பு மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகி வருகிறது. பண்ருட்டி சென்னை - கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அரசு உணவு தானிய சேமிப்பு கிடங்கின் முன்புறம் டாடா ஏஸ் வேன்கள் நிறுத்துமிடத்தில் ஒரு லோடு கல் உப்பு மூட்டைகள் கேட்பாரற்று மழையில் நனைந்து வீணாகி வருகிறது.  தமிழக அரசு சார்பில்  அயோடின் கலந்த ஒரு கிலோ பாக்கெட் கொண்ட 25 கிலோ பைகள் மூலம் சேமிப்பு கிடங்கில் சேமித்து தேவைக் கேற்ற  நியாய விலைகடைகளுக்கு ஒரு கிலோ 3.50 பைசா  விலையில் பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.  வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ கல் உப்பு 7 ரூபாய் அளவில் விற்கும் நிலையில் சேமிப்பு கிடங்கு அதிகாரிகள் அலட்சியம் காரணமாக கடந்த 5 நாட்களாக அயோடின் கலந்த உப்பு மழையில் நனைந்து வீணாகி வருகிறது.

**ஆனைமலையில் கொப்பரை ஏலம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,23:14 IST

பொள்ளாச்சி : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக ரூ. 44.20 விலை கிடைத்தது. ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 27 பேர் 33 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை 5 வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 12 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 40.70 ரூபாய் முதல் அதிகபட்சமாக 44.20 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 21 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 37.05 ரூபாய் முதல் அதிகபட்சமாக 39.20 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், "ஆனைமலை ஏலத்திற்கு கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை வரத்து குறைந்துள்ளது. கொப்பரையில் ஈரப்பதம் அதிகம் இருந்ததால் விலை குறைந்துள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது முதல் தர கொப்பரை கிலோவுக்கு 90 பைசா குறைந் துள்ளது. இரண்டாம் தர கொப்பரை கிலோவுக்கு 1.10 ரூபாயும் விலை அதிகரித்துள்ளது' என்றனர்.

**தொடர்மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் சேதம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,22:39 IST

மடத்துக்குளம் : தொடர் மழையினால், மடத்துக்குளம் அருகே அறுவடைக்கு தயாராக இருந்த பல ஏக்கர் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளன. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் கவலை அடைந்துள்ளனர்.மடத்துக்குளம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் விவசாயம் முக்கியத்தொழிலாக உள்ளது. இப்பகுதியில், அமராவதி பழைய ஆயக்கட்டு மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்தில் நெல், மக்காச்சோளம், கரும்பு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இப்பகுதிகளில், போதிய நீர் கிடைப்பதால், மற்ற பயிர்களை விட நெற்பயிர்களை அதிக அளவில் சாகுபடி செய்து வருகின்றனர். இந்தாண்டு, அமராவதி பழைய ஆயக்கட்டு பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் கோ.43, கல்சர் பொன்னி, உள்ளிட்ட நெற் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது.

நெல் சாகுபடிக்கு ஏக்கருக்கு நடவு, உரம் வைத்தல், களை எடுத்தல் உள்ளிட்ட பணிகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. ஏக்கருக்கு 35 முதல் 45 மூட்டை வரை கிடைக்கும். இதன் மூலம் ஏக்கருக்கு 5ஆயிரம் முதல் 7 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும் என விவசாயிகள்

எதிர் பார்த்தனர். இந்நிலையில், மடத்துக்குளம் அருகேயுள்ள சோழமாதேவியில், 50 ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் மழையினால் சேதமடைந்துள்ளன.

விவசாயிகள் கூறியதாவது: சோழமாதேவியில் அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்தில், 50 ஏக்கருக்கு மேல் நெற்பயிர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் சாகுபடி செய்யப்பட்டன. போதிய லாபம் கிடைக்கும் என எதிர்பார்ப்புடன் நெற் சாகுபடி மேற்கொள்ளப்பட்டன. தற்போது அறுவடைக்கு தயாராகியது.இந்நிலையில், மடத்துக்குளம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் பெய்த தொடர் மழையினால், நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அறுவடை செய்ய வேண்டிய தருணத்திலிருந்த நெற் பயிர்கள் விளைநிலத்தில் அப்படியே சாய்ந்தன.

சோழமாதேவியில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் அனைத்தும் சாய்ந்ததால்,நெல் மணிகள் கீழே விழுந்து மீண்டும் முளைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.ஏக்கருக்கு 35 முதல் 45 மூட்டை வரை கிடைப்பது தற்போது ஏற்பட்ட மழையின் பாதிப்பால்30 சதவீதம் கூட கிடைக்குமா என்பதே கேள்விக்குறியாகியுள்ளது. சாகுபடிக்கு செலவு செய்த பணத்தை கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றனர்.

செலவு அதிகம் : செம்மை நெல் சாகுபடி முறையை கடைபிடித்தால் சாகுபடி செலவு 40 சதவீதம் குறைய வாய்ப்புள்ளதாக வேளாண்மை துறை அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் மடத்துக்குளம் மற்றும் சுற்றுப் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் பழைய முறையிலேயே நடவு மேற்கொண்டனர். இதனால், செலவு அதிகரித் துள்ளது.தற்போது பெய்த மழையினால், அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், இயந்திரத்தை பயன்படுத்த முடியாமல், கூலி ஆட்களை பயன்படுத்தி அறுவடை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.இயந்திரம் பயன்படுத்தி அறுவடை செய்ய செலவிடப்படும் செலவினை விட இரண்டு மடங்கு தொகை ஆட்கள் கூலிக்கு செலவாகும். ஆனால் ஏக்கருக்கு குறைந்த அளவே நெல் கிடைப்பதால் போதிய லாபமில்லாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**பலா கன்றுகள் நட்டு பயன்பெற வேளாண் உதவி இயக்குனர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,21:25 IST

பண்ருட்டி : ஆண்டுக்கு இருமுறை காய்க்கும் பலா மரக்கன்றுகள் நட்டு பயன் பெற விவசாயிகளை வேளாண்மை உதவி இயக்குனர் அரிதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார். வேளாண் உதவி இயக்குனர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: உலகிலேயே அதிக எடையுள்ள பழங்களை தருவது பலாமரம். ஒரு கிலோ முதல் 100 கிலோ வரையில் விளைச்சல் பெறும். 3 ஆண்டுகள் முதல் 300 ஆண்டுகள் வரை பலன் தருகிறது. வளர்ந்த பெரிய மரம் ஆண்டுக்கு 750 பழங்கள் வரை காய்க்கிறது. பிற பழங்களை விட பன்மடங்கு சத்தான உணவு. 100க்கும் மேலான உணவு

பண்டங்கள் செய்திட முடியும். பலா அல்வா, சிப்ஸ், ஐஸ்கீரீம், வற்றல்கள், ஊறுகாய், பழவற்றல், வறுவல்கள், பழச்சாறு, பலா மிட்டாய், பலாபுட்டு, பலாபன், பலா பிரியாணி, பலா கொட்டை மாவு, பலா ஜாம், பலா பாயசம், பலா ஒயின், பலா பொறியல், பலா கொழுக்கட்டை என இனிப்பு பண்டங்கள் பல தயாரிக்கலாம்.

பலா புரதம், கொழுப்பு, மாவுசத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு சத்து, விட்டமின் ஏ, பி, உள்ளது. பலா மரம் பசுமை மாறா மரமாக உள்ளது. சுற்றுசுழல் பாதுகாப்பு தரும். இயற்கை இடர்பாடு தாங்கி வள ரும். தற்போது பாலூர்-1, பாலூர்-2, பர்லியார்-1, பேச்சிப்பாறை-1, சிங்கப் பூர் பலா ரகங்கள் உள்ளது. இதில் பாலூர்-1, பர்லியார்-1, பேச்சிப்பாறை-1, மற்றும் சிங்கப்பூர் பலா ஆண்டிற்கு இரு பருவங்களில் காய்க்கும். நிலமுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் வீட்டு மனைகளை சுற்றி வளர்த்து பயன்பெறலாம். தற்போது ஆண்டுக்கு இருமுறை காய்த்து பலன் தரும் ரகங்கள் விற்பனைக்கு உள்ளது. மரக்கன் றுகள் தேவையான விவசாயிகள், பொதுமக்கள் பண் ருட்டி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் மற்றும் தோட்டக் கலை அதிகாரிகளை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

**பல லட்சம் ரூபாய் நஷ்டமானதால் விவசாயிகள் கவலை: 600 ஏக்கர் வாழை, கரும்பு சாய்ந்தன**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,21:38 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் "ஜல்' புயல் தாக்கியதில் 600க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிர் செய்திருந்த வாழை, கரும்பு பயிர்கள் சாய்ந்து சேதமாகின. இதனால் பல லட்சம் ரூபாய் இழப்பீடு உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன் தினம் "ஜல்' புயல் காரணமாக காலை முதல் மதியம் வரை தொடர்ச்சியாக மழை பெய்தது. பின்னர் மாலை ஓரளவு பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் மாவட்டத்தின் பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது. பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்ததால் போக்குவரத்தும் பாதித்து மின் இணைப்பும் துண்டிக்கப்பட் டது. மழை நீர் வடியாததால் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சங்கராபுரம் பகுதியில் நேற்று முன் தினம் வீசிய காற்றில் நெடுமானூர் காட்டுகொட்டாய், ஆலத்தூர், எஸ்.குளத்தூர் கிராமங்களில் 100 ஏக்கர் கரும்பு பயிர்கள் சாய்ந்தன. சம்பா நடவு செய்த வயல்களில் தண்ணீர் தேங்கியது. விழுப்புரம் அடுத்த நன்னாடு, விராட்டிக்குப்பம், தோகைப் பாடி, உட்பட பல கிராமங்களில் 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிர் செய்திருந்த வாழை மற்றும் கரும்பு பயிர்கள் அடியோடு சாய்ந்தன. வானூர் பகுதியிலும் வாழை பயிர் சேதமடைந்தன.

செஞ்சி பீரங்கிமேடு பகுதியை சேர்ந்த ரங்கசாமி என்பவரின் விவசாய நிலம் சந்திரகிரி மலையை ஒட்டி எம்.ஜி.ஆர்., நகர் பகுதியில் உள்ளது. இதில் பயிர் செய்திருந்த 2.20 ஏக்கர் வாழை பயிர்

காற்றுடன் பெய்த மழையால் சேதமடைந்தது. இதனால் 1.50 லட்சம் ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட் டுள்ளது. இந்த வாழை தோட்டத்தை செஞ்சி தோட்டக் கலை அலுவலர் சீனிவாசன், உதவியாளர் அம்பேத்கர் ஆய்வு செய்தனர்.மேலும் வாழைக்குலைகள் அறுவடைக்கு இன்னும் 15 முதல் 20 நாட்கள் இருக்கும் நிலையில் மரங்கள் வேரோடு சாய்ந்ததால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வாழைக் காய்கள் குலை விட்டு பாதியளவு கூட விளையாத நிலையில் மரங்கள் சாய்ந்து சேதமடைந்து அவற்றை வாங்க வியாபாரிகள் யாரும் முன் வரவில்லை. வயலில் வாழைக்காய்கள் பூக்களோடு காட்சியளிக்கின்றன. திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகளுக்கு குலையுடன் கூடிய ஒரு ஜோடி வாழை மரம் 300 ரூபாய் வரை விலை போனது.

ஆனால் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மரங்கள் புயல் காற்றில் வேரோடு சாய்ந்துள்ளதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் ஒரு ஏக்கரில் பயிர் செய்திருந்த விவசாயிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் முதல் 75 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அதே போல் பல இடங்களில் கரும்பு பயிர்களும் வேரோடு சாய்ந்து போனது. இதனால் மாவட்டம் முழுவதும் வாழை மற்றும் கரும்பு பயிர் செய்துள்ள விவசாயிகள் கவலையில் உள்ளனர்.மாவட்டத்தில் நேற்று முன் தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்துள்ள மழை விவரம்: செஞ்சி 164 மி.மீ., திண்டிவனம் 97 மி.மீ., விழுப்புரம் 100 மி.மீ., திருக்கோவிலுர் 67.5 மி.மீ., வானூர் 88.5 மி.மீ., கள்ளக்குறிச்சி 32 மி.மீ., சங்கராபுரம் 50 மி.மீ., உளுந்தூர்பேட்டை 49 மி.மீ., மற்றும் மரக்காணத்தில் 57 மி.மீ., அளவு மழை பெய்துள்ளது.

**ரூ.8 லட்சத்துக்கு வாழைக்காய் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2010,23:03 IST

அவிநாசி : அவிநாசியில் நேற்று நடந்த வாழைக் காய் ஏலத்துக்கு வரத்து அதிகரித்தது.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த வாழைக்காய் ஏலத்துக்கு 10 ஆயிரத்து 200 தார் வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தைவிட 3,500 அதிகம். வரத்து அதிகரித்த நிலையில், விலையில் சற்று மாற்றம் ஏற்பட்டது. நேற்றைய ஏலத்தில் நேந்திரன் ரக வாழைக்காய் கிலோவுக்கு ரூ.18 முதல் ரூ.23.60 வரைக்கும், கதலி ரக வாழைக்காய் கிலோவுக்கு ரூ.12 முதல் ரூ.17.60 வரைக்கும் ஏலத்தில் எடுக்கப்பட்டது.

அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது: தீபாவளியை முன்னிட்டு கடந்த வாரம் ஏலம் நடக்காததால், இந்த வாரம் வரத்து அதிகரித்திருந்தது. இருப்பினும், நேந்திரன் ரகம் விலை சற்று குறைந்தது; கதலி விலை அதிகரித்தது. நேந்திரன் ரகம்

கிலோவுக்கு ரூ.3 குறைந்தது; கதலி ரூ.2 அதிகரித்தது. மொத்தம் ரூ.8 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது, என்றார்.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

## கடந்த ஏழு ஆண்டுகளில் வட மாநிலங்களில் காபி பயன்பாடு பன்மடங்கு உயர்வு

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*பெங்களூர்*

*காபி பயன்படுத்துவதில் இதுநாள் வரை தென்மாநிலங்களின் பங்களிப்பே மிகவும் அதிகமாக இருந்தது. ஆனால் அண்மைக்காலமாக வடமாநிலங்களில் காபி பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவதாக புள்ளி விவரம் ஒன்று தெரிவித்துள்ளது.*

*42 சதவீதம்*

*கடந்த 2003 மற்றும் 2009 ஆண்டுகளுக்கு இடையில் வட மாநிலங்களில் காபி நுகர்வு 42 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேசமயம் அதிக அளவில் காபி அருந்தும் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இது, 3.5 சதவீதம் என்ற அளவில் நிலையாக உயர்ந்துள்ளது. நாட்டின் மொத்த காபி பயன்பாட்டில் தென்மாநிலங்களின் பங்களிப்பு 78 சதவீதமாகும்.*

*தற்பொழுது மகாராஷ்டிரா, டெல்லி மற்றும் அதனைச் சுற்றி புதிதாக உருவாகி வரும் நகர் பகுதிகளில் காபி அருந்தும் பழக்கம் சிறப்பான அளவில் உயர்ந்து வருவதாக சர்வதேச காபி வாரியத்தின் உயர் அதிகாரி தெரிவித்தார்.*

*கடந்த 2006–ஆம் ஆண்டில் உள்நாட்டில் காபி நுகர்வு 13.50 லட்சம் மூட்டைகள் (ஒரு மூட்டை = 60 கிலோ) என்ற அளவில் இருந்தது. இது, சென்ற 2009–ஆம் ஆண்டில் 15.70 லட்சம் மூட்டைகளாக அதிகரித்துள்ளது. உள்நாட்டில் காபி பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் காபி வாரியம் மேற்கொண்டு வரும் திட்டங்களுக்கு நல்ல அளவில் பலன் கிடைத்துள்ளது.*

*ஏற்றுமதி*

*நாட்டில் உற்பத்தியாகும் மொத்த காபியில் 80 சதவீதம் ஏற்றுமதியாகிறது. 20 சதவீத*

காபி உள்நாட்டில் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலையில் உள்நாட்டில் காபி பயன்பாடு அதிகரித்து வருவதால் மேற்கண்ட ஏற்றுமதி அளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் நுகரப்படும் மொத்த காபியில் இன்ஸ்டன்ட் காபி பங்களிப்பு 57 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது. மீதமுள்ள 43 சதவீதம், காபி கொட்டைகள் வறுத்து அரைக்கப்பட்டு பில்டர் காபியாக பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிக மகசூல் பெற விவசாயிகள் தரமான விதைகளை தேர்வு செய்வது எப்படி? விதைசான்று இயக்குனர் விளக்கம்

கோவை, நவ.9–

அதிக மகசூல் பெற விவசாயிகள் தரமான விதைகளை தேர்வு செய்வது எப்படி என்று விதை சான்று இயக்குனர் விளக்கம் அளித்து உள்ளார்.

இது குறித்து கோவை மாவட்ட விதை சான்று இயக்குனர் (பொறுப்பு) க.கருணாநிதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சான்று விதை உற்பத்தி

தரமான விதைகள் என்பவை நல்ல முளைப்புத்திறன் புறத்தூய்மை, அளவான ஈரப்பதம், பிறரக கலப்பு இல்லாமை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் இல்லாமல் இருப்பது ஆகும். இப்படிப்பட்ட நல்ல விதைகளை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெற முடியும். மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பயிர் ரகங்களில் இருந்து சான்று விதை உற்பத்தி செய்யப்படுகிறது. விதை உற்பத்தி செய்ய விருப்பப்படும் ஆதார நிலை, சான்று நிலை உற்பத்தியாளர்கள் விதைப்பயிர் விதைப்பு செய்யப்பட்ட 35 நாட்களுக்குள் அருகில் உள்ள விதைச் சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டவுடன் விதைச்சான்று அலுவலர்கள் குறிப்பிட்ட நாளில் வளர்ச்சி பருவம், பூ பூக்கும் பருவம், அறுவடை பருவம் ஆகிய காலகட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு விதை வயலில் சரியான விதை ஆதாரம் பயன்படுத்தப்பட்டு உள்ளதா, பயிர் விலகு தூரம் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்வார்கள்.

விதை ஆய்வு–சான்று அட்டை

வயல் பரிசோதனையில் விதைகள் தேறும் பட்சத்தில் அறுவடைக்கு அனுமதிக்கப்படும். அறுவடை செய்த பின் வயல்மட்ட விதைகளை ஆய்வு செய்து சுத்தமான சாக்குபைகளில் இட்டு சீல் வைக்கப்பட்டு சுத்தப்பணிக்காக அங்கீகரிக்கப்பட்ட விதை சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படும். விதை சான்று நிலையத்தில் உள்ள

விதைசான்று அலுவலர் அந்த குவியலை பார்வையிட்டு சுத்திகரிப்பு செய்து விதை மாதிரிகளை எடுத்து பகுப்பாய்வுக்காக விதை பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி வைப்பார்கள்.

விதை பரிசாதனை நிலையத்தில் மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைப்படி ஈரப்பதம், புறத்தூய்மை, முளைப்புத்திறன் மற்றும் பிறரக கலப்பு ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகிறது. இந்த விதைகள் தேறும் பட்சத்தில் ஆதார நிலை விதைக்குவியலாக இருந்தால் வெள்ளை சான்று அட்டையும், சான்று நிலை குவியலாக இருந்தால் நீல நிற சான்று அட்டையும் விதைச் சான்று அலுவலர்களால் வழங்கப்படுகிறது.

நல்ல முளைப்பு திறன்

இந்த விதைகளை பயன்படுத்துவதால் வயலில் நல்ல முளைப்பு திறன் இருக்கும். மேலும் பயிர் எண்ணிக்கையை நன்கு பராமரிக்க முடியும். இதே போல் பயிர் வளர்ச்சி, முதிர்ச்சி சீராகவும் இருக்கும். மேலும் பயிர் கலப்படம் இல்லாமலும் ஒரே நேரத்தில் அறுவடை செய்ய முடியும். இதன் மூலம் எதிர்பார்த்த மகசூலை விட கூடுதல் மகசூல் பெற முடியும்.

எனவே விவசாயிகள் நல்ல மகசூல் பெற சான்று பெற்ற விதைகளை விதைப்புக்கு பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## ரன்னிமேடு ரெயில் நிலையத்துக்கு அருகே 8 ஆயிரம் மலர் செடிகளுடன் புதிய பூங்கா விரைவில் அமைகிறது

குன்னூர், நவ.9–

ரன்னிமேடு ரெயில் நிலையத்துக்கு அருகே 8 ஆயிரம் மலர் செடிகளுடன் புதிய பூங்கா அமைக்கப்பட உள்ளது.

புதிய பூங்கா

குன்னூர்–மேட்டுப்பாளை யம் ரோட்டின் வழியாக சுற்றுலா பயணிகள் நீலகிரி மாவட்டம் வருகை தருகிறார் கள். கோடை சீசன் நீலகிரி மாவட்டத்தில் தொடங்கிய உடன் சுற்றுலா பயணிகள் குன்னூர்–மேட்டுப்பாளையம் ரோட்டில் அதிகளவு வந்து கொண்டு உள்ளனர்.

குன்னூர்–மேட்டுப்பாளை யம் ரோட்டில் வாகனங்கள் மூலம் வரும் சுற்றுலா பயணி

கள் பல்வேறு இடங்களில் வாகனங்களை நிறுத்தி இளைப்பாறி பின்னர் மீண்டும் தங்கள் பயணத்தை தொடங் குகின்றனர். குன்னூர்– மேட்டுப்பாளையம் ரோட்டில் ரன்னிமேடு அருகே புதிய பூங்கா ஒன்றை அமைக்க தோட்டக்கலை துறை திட்ட மிட்டது.

நிலம் தேர்வு

இதன்படி ரன்னிமேடு ரெயில் நிலையத்திற்கு அருகே நிலம் தேர்வு செய்யப்பட்டது. கடந்த மே மாதம் நிலம் தேர்வு செய்யப்பட்டு, பூங்கா அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. 2 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட இந்த நிலத்தில் மலர் செடிகள் நடவு செய்தும், பொழுதுபோக்கு அம்சங்களை அமைக்கவும் தோட்டக்கலை துறை திட்ட மிட்டது.

பூங்கா அமைப்பதற்கான நிலம் தயார் செய்யப்பட்டு அதில் மலர் செடிகள் நடவு செய்வதற்கான பணிகள் நடை பெற்று வருகின்றன. இது குறித்து குன்னூர் தோட்டக் கலை துறை உதவி இயக்குனர் மணி கூறியதாவது:–

8 ஆயிரம் மலர் செடிகள்

தமிழகத்தின் மற்ற மாவட் டங்கள், வெளி மாநிலங்கள், வெளி நாடுகள் ஆகியவற்றில் இருந்து நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் பெரும்பாலும் மேட்டுப் பாளையம் வழியாக தான் வருகிறார்கள்.

குன்னூர்–மேட்டுப்பாளை யம் ரோட்டில் வாகனங்கள் மூலம் வரும் சுற்றுலா பயணி களுக்காக புதிய பூங்கா அமைக்க தோட்டக்கலை துறை திட்டமிட்டது.

இதன்படி இந்த ரோட்டில் ரன்னிமேடு ரெயில் நிலையம் அருகே 2 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பூங்கா அமைக்க நிலம் தயார் செய்யப்பட்டு உள்ளது. மலர் நாற்றுக்கள் நடவு செய்வதற்கான பாத்திகள் தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்த பாத்திகளில் மலர் செடிகள் நடவு செய்யப் படும். இந்த பூங்காவில் முதல் கட்டமாக 8 ஆயிரம் மலர் செடிகள் நடவு செய்யப்பட உள்ளது. இந்த மலர் செடிகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து பூக்க கூடிய தன்மை உடையது ஆகும்.

உற்பத்தி

மலர் செடிகள் பெங்களூர் மற்றும் தோட்டக்கலை துறை பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டது ஆகும். இந்த மலர் செடிகள் நடவு செய்யும் பணி விரைவில் தொடங்கப் படும். எதிர்வரும் கோடை சீசனில் இந்த மலர் செடிகளில் மலர்கள் பூத்து சுற்றுலா பயணிகளை வரவேற்கும் விதமாக இருக்கும்.

குன்னூர்–மேட்டுப்பாளை யம் ரோட்டில் ரன்னிமேடு ரெயில் நிலையம் அருகே

*அமைக்கப்படும் புதிய பூங்கா சுற்றுலா பயணிகள் இளைப் பாறும் இடமாக இருக்கும். இவ்வாறு உதவி இயக்குனர் மணி கூறினார்.*

## தேயிலை மகசூல் அதிகரிப்பு



கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வந்தது. பகல் நேரங்களில் கடந்த 2 நாட்களாக வெயில் அடிக்கிறது. இதனால் தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. தேயிலை செடிகளில் கொழுந்து விட்டுள்ள காரணத்தால் கொலக்கம்பை பகுதியில் எங்கு பார்த்தாலும் தேயிலை செடிகள் பச்சைபசேல் என்று காட்சி அளிக்கிறது.

## *குன்னூர் ஏல மையத்தில் ரூ.2 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம்*

*குன்னூர், நவ.9–*

*குன்னூர் தேயிலை ஏல மையத்தில் ரூ.2 கோடி மதிப்பிலான தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*

*தேயிலை ஏலம்*

*குன்னூர் தேயிலை ஏல மையத்தில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை தூள் ஏலம் நடை பெற்று வருகிறது. விற் பனை எண் 44–க்கான ஏலம் கடந்த 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து*

79 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது.

இதில் 8 லட்சத்து 86 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 94 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. ஏலத்தில் உள்நாட்டு வர்த்தகம் களை கட்டாமல் இருந்தது.

ரூ.2 கோடிக்கு தேக்கம்

ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தமட்டில் ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்த வர்த்தகர்கள் குறைந்த அளவு தேயிலை தூளே வாங் கினர். இதனால் அனைத்து தேயிலை தூளின் ரகங்களும் 3 ரூபாய் விலை வீழ்ச்சி அடைந்தது. உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகம் களை கட் டாததால் 30 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. தேக்கம் அடைந்த தேயிலை தூளின் மதிப்பு ரூ.2 கோடி இருக்கும் என்று கணக் கிடப்பட்டு உள்ளது.

உயர்ந்தபட்ச விலை

சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 125 ரூபாய் இருந்தது. 40 தொழிற் சாலைகள் தங்களின் தேயிலை தூளை 100 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்தன. கம்பெனி எஸ்டேட் தேயிலை தொழிற்சாலைகள் தயாரிக்கும் ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 200 ரூபாய் உயர்ந்தபட்ச விலையாக இருந்தது. 35 தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு தேயிலை தூளை விற்பனை செய்தன. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 40 ரூபாயில் இருந்து 46 ரூபாய் வரையிலும், விலைஉயர்ந்த தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 115 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றன.

அடுத்த ஏலம்

வர்த்தகத்தை பொறுத்த மட்டில் சாதாரண வகை 46 ரூபாயில் இருந்து ரூ.42 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து ரூ.122 வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 45-க்கான ஏலம் வருகிற 11, 12 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 18 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

# அதிசய முள்ளங்கி



கொலக்கம்பை பகுதியை சேர்ந்த விவசாயி சுப்ரமணி என்பவரது தோட்டத்தில் முள்ளங்கி பயிரிடப்பட்டது. அவர் அறுவடை செய்து பார்த்த போது, ஒரு முள்ளங்கி மனிதனின் கைவிரல்கள் போன்று காட்சி அளித்தது. அந்த அதிசய முள்ளங்கியை அந்த பகுதி மக்கள் ஆர்வத்துடன் வந்து பார்த்து சென்றனர்.